பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 07 சனிக்கிழமை 24.09.2022 கதிர் 210

## அதியுயர் பாதுகாப்பு வலயங்கள்: சட்டத்தரணிகள் சட்ட நடவடிக்கை

கொழும்பு மாவட்டத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதி பிறப்பித்த உத்தரவு தொடர்பில் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக இலங்கை சட்டத்தரணிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

☞2

# போராளிகளைக் கொச்சைப்படுத்துவோர் எங்கள் அமைப்பில் இருக்கவே முடியாது!

## கஜேந்திரகுமார் எம்.பி. அதிரடி அறிவிப்பு



கொள்கைக்காகப் பயணிக்கும் போராளிகளின் அர்ப்பணிப்பையும், தியாகத்தை நாம் உட்பட எவரும் கொச்சைப்படுத்த முடியாது. அந்தப் போராளிகளுக்கான மதிப்பைக் கொடுக்கத் தயாரில்லாத எவரும் எம் அமைப்பில் இருக்கவே முடியாது.

-இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தியாகதீபம்திலீபனின்நினைவேந்தல் விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரட்ணம் சுகாஷுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் இடையில் எழுந்துள்ள கருத்து மோதல்கள் குறித்து ஊடகங்கள் வினவியபோதே கஜேந்திர குமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தேச விடுதலைக்காகப் போராடிய போராளிகளை நாம் முன்னாள் போராளிகள் எனக் கருதவில்லை. தமது கொள்கைக்காக நேர்மையாகப் பயணிக்கும் அவர்கள் போராளிகள்தான். அவர்கள் எம் பெருமதிப்புக்கு உரியவர்கள். அவர்களது அர்ப்பணிப்பையும், தியாகத்தை நாம் உட்பட எவரும் கொச்சைப்படுத்த முடியாது.

☞2

# இலங்கையில் இடம்பெற்றது தமிழினப் படுகொலைதான்!

## அங்கீகரித்து அறிவிக்குமாறு பிரிட்டன் எம்.பிக்கள் வலியுறுத்து



இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது, தமிழ் மக்களை இலங்கை அரசு இனப் படுகொலை செய்தது. இதை பிரிட்டன் ஏற்று அங்கீகரிக்க வேண்டும் – என்று பிரிட்டன் எம்.பிக்கள் இருவர் அந்த நாட்டு வெளி விவகாரத் துறை அமைச்சரை வலியுறுத்தியுள்ளனர்.

☞2

## ஜப்பான் பறக்கின்றார் ரணில்

### புதிய அமைச்சர்கள் நியமனம் ஒத்திவைப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை ஜப்பானுக்குச் செல்லவுள்ளார்.

அதற்கு முன்னர் புதிய அமைச்சர்கள் 12 பேரை நியமிக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

☞2

## 37 இலங்கையர்கள் ரொமேனியாவில் கைது




ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல முயன்ற 37 இலங்கையர்கள் ரொமேனியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சரக்குகளை ஏற்றிச் சென்ற மூன்று டிரக்குகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அதில் மறைந்த நிலையில் சட்டவிரோதமாக ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற 37 இலங்கைப் பிரஜைகள்

☞2

## வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று கொடியேற்றம்!



(இ.கலையமுதன்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்., வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா இன்று கொடியேற்றத்துடன்

☞2

## பிக்குவைப் பயன்படுத்தி தங்கம் கடத்தியவர் கைது

2 கோடி 49 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் தனது பயணப் பையில் வைத்து கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியே எடுத்துச் சென்றுகொண்டிருந்த பௌத்த பிக்கு ஒருவரைச்

☞2

## சட்டவிரோத மரக்கடத்தல் பொலிஸாரால் முறியடிப்பு

### சாரதி தப்பியோட்டம்



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் சட்டவிரோதமாக மரக்கடத்தல் பூவரசங்குளம் பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

☞2

## அடக்குமுறைக்கு எதிராக அதிரடி ஆட்டம் தொடரும்

### ஜீவன் தொண்டமான் சூளுரை



தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை வெற்றியளித்துள்ளது. இது ஆரம்பம் மட்டுமே. கம்பனிகளின் அடக்குமுறைகளுக்கு எதிரான

☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இறுதி யுத்த..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிபரல்ஜனநாயகக்கட்சியின்எம்.பிக்கள் இருவரே புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜேம்ஸ் கிலெவெர்லியிடம் இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின்போது தமிழ் மக்கள் மீது இனப்படுகொலைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இடம்பெற்றது இனப் படுகொலைதான் என்பதை பிரிட்டன் அங்கீகரிக்க வேண்டும்.

போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள இலங்கையின்சிரேஷ்ட அதிகாரிகளுக்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதிக்க வேண்டும். உள்நாட்டுப்பொறிமுறைகள் தோல்விகண்டுள்ளன என்பது தெளிவான விடயம். ஆதலால், பிரிட்டன் இது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை அரசு தொடர்ந்தும் வழமைபோல தாமதப்படுத்தும், மறுக்கும், தப்பிக்க முயலும். ஆதலால், போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை உரிய முறையில் விசாரணை செய்யவேண்டும், அவர்கள் செய்த விடயங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

தனிநபர் ஒருவர் அநீதிகளில் உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்பதற்கான ஆதாரங்கள் காணப்பட்டால் மக்னிட்ஸ்கி தடைகளை பயன்படுத்துவது உட்பட பிரிட்டன் அரசு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கை தற்போது அரசியல் பொருளாதார மனித உரிமை நெருக்கடியில் சிக்குண்டுள்ளது. உணவு மருந்து எரிபொருள் போன்றவற்றுக்கான தட்டுப்பாடு நாடாளாவிய ரீதியில் மில்லியன் கணக்கான மக்களுக்குக் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இப்படியொரு நிலையில் இலங்கை ஜனாதிபதியின் தலைமைத்துவம் குறித்து நாங்கள் ஆழ்ந்த ஏமாற்றமடைந்துள்ளோம். அவரது அரசின் கீழ் இடம்பெறும் ஒடுக்குமுறை குறித்த எங்கள் அதிருப்தியை வெளிப்படுத்துகின்றோம்.

இலங்கை மக்கள் சீர்திருத்தங்களுக்காக வீதிகளில் இறங்கிப் போராடும் போது பிரிட்டன் அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். நெருக்கடியின் மனிதாபிமான விளைவுகளுக்குத் தீர்வு காணப்படுவதை உறுதி செய்வதற்காக எங்களின் சகாக்களுடன் இணைந்து பிரிட்டன் செயற்பட வேண்டும்.

தமிழர்களுக்கு எதிராக இனப் படுகொலை நடவடிக்கைகள் இடம்பெற்றன என்பதை அங்கீகரிக்கும் முக்கியமான நடவடிக்கையை நீங்கள் எடுப்பீர்கள் எனநாங்கள்நம்புகின்றோம்.

பிரிட்டன் அரசு கடந்த கால அநீதிகளை அலட்சியம் செய்யக்கூடாது. தற்போது இடம்பெறும் மனித உரிமைகளையும் நாங்கள் புறக்கணிக்க முடியாது - என்றுள்ளது.

## போராளிகளைக்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் போராளிகளுக்கான மதிப்பைக் கொடுக்கத் தயாரில்லாத எவரும் எம் அமைப்பில் இருக்கவே முடியாது.

போராளிகளைப் போற்றுவதும், மக்களுக்காகத் தம்மை அர்ப்பணித்த அவர்களைப் பராமரிப்பதும் எமது தேசத்தின் தலையாய கடமை என்றே நான் கருதுகின்றேன்.

ஆனால், எத்தனையோ உயிர் அர்ப்பணிப்புக்களால் கட்டியெழுப்பப்பட்ட எமது தேசத்தின் கொள்கையைக் கைவிட்ட எவரும் தம்மை 'முன்னாள் போராளி' எனும் அடையாளத்தை வைத்துக் கொண்டு மக்களைப் பிழையாக வழிநடத்த முடியாது. அப்படியாயின் கருணா கூட தன்னை முன்னாள் போராளி என அழைத்து அந்த அடையாளத்தைக் காட்டி எம்மைப் பிழையாக வழிநடத்த முடியும். அதற்கு மக்கள் அனுமதிக்கக் கூடாது - என்றார்.

## ஜப்பான்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்த போதும், ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளுக்குச் சென்று திரும்பிய பின்னரே அதனை மேற்கொள்ள ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று தெரிய வருகின்றது.

மணிலாவில் ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ள ரணில், அதற்கு முன்னர் புதிய அமைச்சரவையை நியமிக்க விரும்பவில்லை என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவது அந்தப் பேச்சுக்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஜனாதிபதி கருதுகின்றார் என்று தெரிகின்றது.

## பிக்குவைப்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுங்கப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

தெஹியத்தகண்டிய, சிறிபுர பௌத்த மத்திய நிலையத்தைச் சேர்ந்த 58 வயதான பிக்குவே நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பிக்கு, டோஹாவிலிருந்து கட்டார் விமான சேவையின் கியூ. ஆர்-654 விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

விமானப் பயணத்தில் நட்பு கொண்ட நபர் ஒருவர், இந்தத் தங்க நகைகளை விமான நிலையத்துக்கு வெளியே எடுத்து வந்து தரும்படி தம்மிடம் ஒப்படைத்தார் என்று இந்த பிக்கு சுங்கப் பிரிவினரிடம் தெரிவித்துள்ளார். இதை யடுத்து சுங்கப் பிரிவினர் அந்த நபரையும் தேடி கைது செய்துள்ளனர்.

இந்தத் தங்க நகைகளைப் பறிமுதல் செய்த சுங்கப் பிரிவினர் பிக்குவை விடுதலை செய்து தங்க நகைகளை பிக்குவிடம் கையளித்த நபருக்கு 5 இலட்சம் ரூபா அபராதம் விதித்தனர்.

## அடக்குமுறைக்கு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது தொழிற்சங்க ஆட்டம் தொடரும்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களில்இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸால் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்குக் கட்சி, தொழிற்சங்க பேதமின்றி தொழிலாளர்கள் ஓரணியில் திரண்டு ஒத்துழைப்பு வழங்கினர். இதனால் தோட்டத்திலிருந்து ஒரு கிராம் தேயிலைகூட வெளியில் செல்லவில்லை.

இந்நிலையில், தொழிலாளர்களின் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்பதற்குப் பெருந்தோட்ட நிறுவனம் இணக்கம் தெரிவித்து, எழுத்துமூல உத்தரவாதத்தை வழங்கியுள்ளது. இதையடுத்து போராட்டம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில், மஸ்கெலியா தோட்டப் பகுதிகளுக்கு நேற்று களப்பயணம் மேற்கொண்ட ஜீவன் தொண்டமான், தொழிலாளர்களுடன் கலந்துரையாடி, தொழிற்சங்க நடவடிக்கைக்காகக் கிடைத்தவெற்றியைப்பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்தினார்..

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்தின்கீழ் நுவரெலியா மாவட்டத்தில் 10 தொழிற்சாலைகளும், பதுளையில் 3 தொழிற்சாலைகளும் இருந்தன. இவற்றில் இருந்து கொழுந்தை வெளியில் கொண்டு செல்ல நாம் அனுமதிக்கவில்லை.

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம், கூட்டு ஒப்பந்தத்தை மதிப்பதில்லை. பேச்சுக்களுக்கு வருவதும் இல்லை. தொழிற்சங்க நடவடிக்கையை அடுத்து பேச்சுக்கு வந்தனர். எழுத்துமூல உத்தரவாதத்தை வழங்கினர். நிலுவைக் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. நாளைக்கும் நிலுவைப் பணம் கிடைக்கும். அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒத்துழைப்பு வழங்கின. நாம் மட்டும் பேர் போட முடியாது. மக்களின் பிரச்சினை தீர்ந்தால் சரி. இனி நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைக்கும் - என்றார்.

## அதியுயர்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற வளாகம், உயர் நீதிமன்றம், மேல் நீதிமன்றம், கொழும்பில் உள்ள நீதிவான் நீதிமன்றங்கள், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகை, பிரதமர் அலுவலகம், இலங்கை இராணுவம், கடற்படை, வான்படை மற்றும் பொலிஸ் தலைமையகம் உள்ளிட்ட கொழும்பு மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களை பிரகடனப்படுத்தும் வர்த்தமானியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வெளியிட்டார்.

இந்தப் பிரகடனத்தின்படி, பொலிஸ்மா அதிபரின் அனுமதியின்றி, அத்தகைய உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் அமைந்துள்ள வீதி, மைதானம், கரை அல்லது ஏனையதிறந்தவெளி பிரதேசங்களில் பொதுக்கூட்டங்கள் அல்லது ஊர்வலங்கள் யாவும் தடை செய்யப்படுகின்றன.

தகுதிவாய்ந்த அதிகார சபை அல்லது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது அனுமதியின் கீழ மாத்திரமே இந்தப் பிரதேசங்களில் வாகனங்களை நிறுத்த முடியும்.

இந்தநிலையில் ஜனாதிபதியின் இந்த உத்தரவு, அதனை மீறுவோரைக் காவலில் வைப்பதற்கும், கருத்துச் சுதந்திரத்தை மீறுவதற்கும், அமைதியாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்துக்கும் கடுமையான விதிகளை கொண்டுள்ளதாக சட்டத்தரணிகள் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் நடமாடும் சுதந்திரத்துக்கும் இது தடையை ஏற்படுத்துகின்றது.

இந்த உத்தரவுகளின் கீழ் ஒரு குற்றச் செயல் தொடர்பாகக் காவலில் வைக்கப் பட்டுள்ள ஒருவருக்கு மேல் நீதிமன்றத்தை தவிர வேறு நீதிமன்றங்களால் பிணை வழங்கப்பட மாட்டாது என்று கூறுவதன் மூலம் பிணை தொடர்பாக கடுமையான விதிகளை இந்த உத்தேச உத்தரவு விதிக்கின்றது என்று சட்டத்தரணிகள் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் எந்தவொரு நியாயமான அல்லது சட்டப்பூர்வமான அடிப்படையும் இல்லாமல், இந்த உத்தரவு குடிமக்களின் சுதந்திரத்தை கணிசமாகக் குறைக்க முற்படுகிறது என்றும் சட்டத்தரணிகள் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தநிலையில் 1993ஆம் ஆண்டு அமரதுங்க எதிர் சிறிமல் 'ஜனகோசா' வழக்கில் உயர்நீதிமன்றின் தீர்ப்பை இலங்கை சட்டத்தரணிகள் சம்மேளனம் நினைவூட்டியுள்ளது.

நியாயமான எதிர்ப்பின் அமைதியான வெளிப்பாடானது, தவிர்க்கமுடியாமல், வேறொரு நாளில் பேரழிவுக்கான வன்முறை வெடிப்புக்கு வழிவகுக்கும் என்று அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது என்று சட்டத்தரணிகள் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

## 37 இலங்கை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரொமேனிய அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டனர்.

இவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

## வல்லிபுர..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமானது. கிரிஜைகள், வசந்தமண்டபப் பூஜை என்பன இடம்பெற்று காலை 8.45 மணிக்கு கொடியேற்றம் மிகச் சிறப்பாக இடம்பெற்றதுடன் கருட வாகனத்தில் எழுந்தருளிய வல்லிபுர ஆழ்வார் ஆலய உள்வீதியில் வலம் வந்தார்.

சப்பறத் திருவிழா ஒக்டோபர் 7ஆம் திகதியும், தேர்த்திருவிழா ஒக்டோபர் 8ஆம் திகதியும், சமுத்திரத் தீர்த்தத் திருவிழா ஒக்டோபர் 8ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது.

கேணித் தீர்த்தத் திருவிழா ஒக்டோபர் 8ஆம் திகதி காலையும், அன்றைய தினம் மாலை கொடியிறக்க உற்சவமும் இடம்பெற்று பெருந்திருவிழா நிறைவு பெறும்.

## சட்டவிரோத..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பூவரசங்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து தம்பனைப் பகுதியில் இருந்து வவுனியாவுக்குக் கப் ரக வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்ட மரக்குற்றிகள் பம்பைமடுப் பகுதியில் வைத்து பூவரசங்குளம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டன.

பொலிஸார் பின்தொடர்வதைக் கண்ட வாகன சாரதி பம்பைமடு பகுதியில் வாகனத்தை விட்டு தப்பியோடிய நிலையில் வாகனத்தில் இருந்த 6 மரக் குற்றிகளும் பூவரசங்குளம் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

கடத்தல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


விளம்பரங்களுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622





நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாடு நிமிருமா?

பணப் பெறுமதி மிக மோசமாக வீழ்ச்சி அடைந்து வரும் உலக நாடுகளில் மூன்றாவது இடத்தில் நிற்கின்றது இலங்கை.

அமெரிக்க டொலருக்கு எதிரான உலக நாடுகளின் பணப் பெறுமதி பற்றிய சர்வதேச மதிப்பீட்டின் அடிப்படையில் இந்த நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு பணத்தின் பெறுமதி வீழ்ச்சி அடைந்து வரும் நாடுகளில் முதலிடம் ஸிம்பாப்வேக்கு. அந்த நாட்டின் பண அலகான ஸிம்பாப்வே டொலர் இப்போது சராசரி 73.33 வீதம் வீழ்ச்சி நிலையைக் காட்டுகின்றது என ஜோன் ஹ்ம்ப்கின்ஸ் பல்கலைக்கழக பொருளியல் பேராசிரியர் ஸ்டீவ் ஹங்ஸ் மேற்கொண்ட ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த நிலையில் கியூபா நாட்டின் பேசோ நாணயத்தின் வீழ்ச்சி காட்டப்படுகின்றது. அது 57.65 வீதம் எனக் காட்டப்படுகிறது.

தொடர்ந்து மூன்றாவது இடத்தில் 47.79 வீத வீழ்ச்சியை இலங்கையின் ரூபா சுட்டி நிற்கின்றது.

பொருளாதார நெருக்கடிகளுக்கு முன்னர் இலங்கையில் அமெரிக்க டொலரின் பெறுமதி சுமார் 230 ரூபா ஆக இருந்தது. அது இப்போது சுமார் 370 ரூபா வரை அதிகரித்துவிட்டது.

மோசமான பொருளாதார நிலைமையால் இலங்கை நாணயத்தின் பெறுமதி விழுந்தது என்று சொல்வதா அல்லது நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியும் பொருளாதார மோசநிலைக்குக் காரணம் என்று சொல்வதா எனக் கேட்டால் இரண்டுமே ஒன்றில் ஒன்று தங்கி இருப்பதே காரணம் என்று கூறலாம்.

நமது நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளால் – பொருளாதாரத்தைக் கையாண்ட முறைமைகளால் – நாட்டின் உள்நாட்டு உற்பத்தி பெருமளவு வீழ்ச்சி கண்டது. ஏற்றுமதி படுத்தது. வெளிநாட்டு இறக்குமதி எல்லை மீறியது. ஒருபுறம் அத்தியாவசிய பொருள்கள் உட்பட அனைத்து பொருள்களுக்கும் இறக்குமதியில் தங்கி இருக்க, ஏற்றுமதி படுத்துப் போக, நாடு பேரிடரில் சிக்கியது. இறக்குமதிக்குத் தேவையான அந்நிய செலாவணி கையிருப்பு கரைந்தது.

அதனால் ரூபாவின் பெறுமதி விழுந்தது. அதைச் செயற்கைத்தனமாகப் பிடித்து வைத்திருப்பதற்காக மத்திய வங்கி டொலரின் பெறுமதியை செயற்கையாக 240 ரூபா என்ற கணக்கில் பலவந்தமாகப் பேண முயன்றது.

அதன் விளைவாக வெளிச்சந்தையில் டொலரின் பெறுமதி எகிறியது.

அதனால் வெளிநாட்டில் பணத்தை உழைத்து இலங்கைக்கு அனுப்புவோரும், இலங்கையிலிருந்து ஏற்றுமதி மூலம் அந்நிய செலாவணியை உழைப்போரும் அந்த அந்நிய செலாவணியை இலங்கை மத்திய வங்கி விதித்திருக்கும் குறைந்த லொலர் பெறுமதி மூலம் அனுப்பாமல் வெளிச்சந்தை ஊடாக – முறையற்ற வழியில் – நாட்டுக்குள் தருவிக்க, வழமையாக நாட்டுக்குக் கிடைக்கும் அந்நிய செல்லாவணியும் கைவிட்டு போனது.

கடைசியில் எல்லாம் கோவிந்தா என்ற நிலைமை. இந்தப் பொருளாதார பின்னடைவிலிருந்து நாடு எப்படி முன்னேற போகின்றது? சர்வதேச நாணய நிதியமும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் மற்ற நாடுகளும் வழங்கக்கூடிய தற்காலிகக் கடன்கள், உதவிகள் மூலம் நாடு பொருளாதார ரீதியில் நிமிருமா?

ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

## பொது மக்களின் காணிகளை விடுவிக்குமாறு கோரிக்கைவிடுத்து மயிலிட்டியில் போராட்டம்!





பொது மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, மயிலிட்டி பகுதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

வலி. வடக்கு மீள்கொடியேற்ற சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைந்த குழுவால் இந்தக் கவன ஈர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கடந்த 30 வருடங்களாக வலி. வடக்குப் பகுதியில் விடுவிக்கப்படாமல் இருக்கும் ஏனைய மூவாயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், மக்கள் அவர்களுடைய சொந்தக் காணிகளில் குடியமர்த்தி அரசாங்கம் அவர்களுக்கு வீட்டுத் திட்டத்தை வழங்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

எமது பிரதேசத்தில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு உயர்பாதுகாப்பு வலயங்களினுள் உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை குடியேற்ற நிலங்களும் உயர் பாதுகாப்பு வலயங்களினுள் உள்ளமையால், மக்கள் தொடர்ந்தும் வாடகை வீடுகள், உறவினர்கள் வீடுகளில் வாழ்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே தங்களின் காணிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனபொதுமக்களால் கோரப்பட்டது.

## ஐ.நாவில் இலங்கை தொடர்பான தீர்மானம் குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அதிருப்தி!

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மைய குழுவால் வெளியிடப்பட்ட இலங்கை தொடர்பான வரைவு தீர்மானம் அதிருப்தியை அளிப்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் –

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது முந்தைய அறிக்கையில் பரிந்துரைத்ததை இந்த வரைவுத் தீர்மானமும் இன்னமும் உள்ளடக்கவில்லை என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இதே பரிந்துரையையே அனைத்து முன்னாள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்களும் இலங்கைக்கு வருகை தந்த முன்னாள் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்கள் மற்றும் இலங்கை தொடர்பான ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் முன்வைத்துள்ளனர்.

மூத்த ஐ.நா. அதிகாரிகளின் இந்தக் கூட்டு பரிந்துரையை முன்னிறுத்தி, நாங்கள் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பாதிக்கப்பட்ட தரப்பினர்கள், தமிழ் அரசியல் கட்சிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் ஆகியோர் மைய குழு நாடுகளுக்கு கூட்டாகக் கடிதம் ஒன்றை எழுதி இருந்தோம். அந்தக்கடிதத்தில் அவர்களின் தீர்மானத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருந்தோம்.

இலங்கை மீதான ஐ.நா. தீர்மான செயல் முறையின் முக்கியமான இந்த தருணத்தில், இந்தத் தீர்மானத்திலாவது இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரைக்க வேண்டும் என்ற எங்களது கோரிக்கையையும் ஐ.நாவின் மூத்த அதிகாரிகளின் கோரிக்கையையும் புறக்கணிக்காது சேர்த்துக் கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமை மன்ற உறுப்பினர்களை குறிப்பாக இந்தியாவை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாவசிய மருந்துகளுடனான விமானம் சீனாவில் இருந்து நாட்டை வந்தடைந்தது


சீனாவில் இருந்து அத்தியாவசிய மருந்துகளுடனான விமானமொன்று நேற்று (வெள்ளிக்கிழமை) இலங்கையை வந்தடைந்துள்ளது.

அந்தவிமானத்தில் சிறுநீரக நோயாளிகள் மற்றும் புற்றுநோயாளிகளுக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகள் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

மேலும் 06 மாதங்களுக்கு போதுமான விசர் நாய் தடுப்பூசிகளும் இந்த மருந்துகளுடன் உள்ளடங்குகின்றன என சுகாதார அமைச்சின் இணைப்பதிகாரி வைத்தியர் அன்வர் ஹம்தானி குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சு சீன அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்ட வேண்டுகோளுக்கு இணங்க இந்த மருந்துப் பொருள்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதன் பெறுமதி சுமார் 50 கோடி ரூபாவாகுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இராணுவத்துக்குக் கட்டாய ஆள்சேர்ப்பா? ரஷ்யாவில் வெடித்தது மக்கள் போராட்டம்!



ரஷ்யாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கட்டாய இராணுவ ஆள்சேர்ப்பு நடைமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல பகுதிகளிலும் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அந்நாட்டின் 38 நகரங்களில் பொதுமக்கள் ஒன்றுக்கூடி போராட்டங்கள் மற்றும் பேரணிகளில் ஈடுபட்டுள்ளனர். போர் வேண்டாம், உடனே நிறுத்துங்கள் எனும் கோஷங்களை எழுப்பியவாறு மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் போராட்டக்காரர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்த போதும் அவர்கள் பொருட்படுத்தப்படவில்லை. அதனையடுத்து பேராட்டத்தில் ஈடுபட்ட சுமார் ஆயிரத்து 332 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

உக்ரைனுக்கு எதிரான போர் நடவடிக்கையை வலுப்படுத்தும் வகையில் ரஷ்யாவில் மீண்டும் 3 இலட்சம் பேர் இராணுவத்திற்கு அழைக்கப்பட்டுள்ளமையுடன் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்களும் மீண்டும் பணிக்கு அழைக்கப்படவுள்ளனர் என சர்வ தேச செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் ரஷ்யாவில் இருந்து 18-65 வயதுக்கு இடைப்பட்டவர்கள் வெளியேறு வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இந்துக்களுக்கு எதிரான தாக்குதல்கள் உலகம் முழுதும் பல மடங்கு அதிகரிப்பு:

### 'இந்து போபியா' என்கிறது அமெ. ஆராய்ச்சி அமைப்பு




வொஷிங்டன், செப்.24

உலகம் முழுதும் இந்துக்களுக்கு எதிரான வெறுப்பு தாக்குதல் மிக வேகமாக அதிகரித்து வருகிறது என, அமெரிக்காவைச் சேர்ந்த அறிவியல் ஆராய்ச்சி அமைப்பு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சமீபகாலமாக, அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் இந்துக்களுக்கு எதிரான தாக்குதல் மற்றும் வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருகின்ற நிலையில், அமெரிக்காவைச் சேர்ந்த வடக்குஅமெரிக்கஇந்துக்கள்கூட்டமைப்பு சார்பில், இது தொடர்பான ஆலோசனை கூட்டம், நேற்று முன்தினம் வொஷிங்டனில் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற 'நெட்வொர்க் கன்டேஜியன் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்' என்ற அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமை அறிவியல் அதிகாரி ஜோயல் பின்கெல்ஸ்டீன் தெரிவித்தவை வருமாறு:- உலகம் முழுதும் மத மோதல்கள் உள்ளிட்டவை தொடர்பாக எங்களுடையஅமைப்பு ஆய்வு செய்தது. இதில், 'இந்து போபியா' எனப்படும் இந்துக் களுக்கு எதிரான மனநிலை தற்போது உலகெங்கும் பரவியுள்ளது தெரியவந்து உள்ளது.

சமீப காலமாக அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் இந்துக்களுக்கு எதிரான தாக்குதல் அதிகரித்துள்ளது. இது, சமூக வலைதளங்களிலும் திட்டமிட்டு பரப்பப்பட்டு வருகிறது. இது, கடந்த சில மாதங்களில் மட்டும், 1,000 மடங்கு அதிகரித்து உள்ளது. மேலும், எவ்.பி.ஐ. எனப்படும் அமெரிக்க உளவு அமைப்பின் புள்ளிவிவரங்களின்படி, அமெரிக்காவில் மட்டும், 2020 இல் இந்துக்களுக்கு எதிரான வெறுப்பு சம்பவங்கள், 500 மடங்கு அதிகரித்து உள்ளது எனத் குறிப்பிட்டுள்ளார்.



## ஆப்கானிஸ்தான் மசூதியில் குண்டுவெடிப்பு: 7 பேர் பலி!

காபூல், செப்.24

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள மசூதியில், நேற்று வெள்ளிக் கிழமை தொழுகைக்காக ஏராளமானோர் வந்திருந்த நிலையில், தொழுகை முடிந்து மக்கள் கூட்டமாக வெளியே வருகை தரும் போது, மசூதி அருகே நிறுத்திப்பட்டு இருந்த காரில், சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்ததாகக் கூறப்படுகின்றது.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஏழு பேர் உயிரிழந்தனர். 41 பேர் படுகாயம் அடைந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. குண்டுவெடிப்பை அடுத்து ஏராளமான இராணுவத்தினர் அங்கு குவிக்கப்பட்டமையுடன், காயமடைந்தோர் மருத்துவமனைக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர். காயமடைந்த சிலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சி நடைபெற்று வரும் நிலையில், கடந்த மாதமும் மசூதி ஒன்றில் குண்டுவெடித்ததையடுத்து 20பேர் வரையில் உடல் சிதறிப் பலியாகியிருந்தனர். இந்நிலையில், இந்தக் குண்டு வெடிப்புக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காங்கிரஸ் தலைமையை ஏற்க ராகுல் திட்டவட்டமாக மறுப்பு!



கொச்சி:அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவிக் கான தேர்தலில், ராஜஸ்தான் முதல்வரும், அக்கட்சியின் மூத்த தலைவருமான அசோக் கெலாட் போட்டியிடப் போகிறார் என நேற்று திட்டவட்டமாக அறிவித்தார். முன்னாள் தலைவர் ராகுலை போட்டியிட வைக்க நடந்த, கடைசி கட்ட சமரச முயற்சி தோல்வியடைந்ததாக கூறப்படுகிறது.

'தலைவர் பதவிக்கு போட்டியிடப் போவதில்லை' என, ராகுல் உறுதிபட கூறியுள்ளார். தேர்தலில் மேலும் பல மூத்த தலைவர்கள் குதிக்க உள்ளமையை அடுத்து, கடும் போட்டி உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளது. காங் கிரஸ் தலைவர் பதவிக்கான தேர்தல் அடுத்த மாதம் 17 இல் நடக்கிறது. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இந்த தேர்தலில் முன்னாள் தலைவரும், எம்.பி.,யுமான ராகுலைப் போட்டியிட வைத்து, அவரை மீண்டும் தலைவராக்கும் முயற்சியில் பல மூத்த காங்கிரஸ் தலைவர்கள் ஈடு பட்டனர். ஆனால், 'தேர்தலில் போட்டியிட விருப்பமில் லை' என ராகுல் கூறி வந்தார். இருந்தாலும், கடைசி நேரத்தில் அவரை சம்மதிக்க வைத்துவிடலாம் என மூத்த தலைவர்கள் கருதினர்.

இந்நிலையில், கேரளாவில் 'ஒற்றுமை யாத்தி ரை'யில் ஈடுபட்டுள்ள ராகுலிடம், அக்கட்சியின் மூத்த தலைவர்கள் பலமுறை பேச்சு நடத்தினர். அவர் தன் முடிவில் உறுதியாக இருக்கிறார் கூறப்படுகிறது. இதற்கிடையே, ராஜஸ்தான் முதல்வரும், மூத்த காங்கிரஸ் தலைவருமான அசோக் கெலாட், தலைவர் பதவிக்கு போட்டியிடப் போகிறார் எனத் தகவல் வெளி யானது. ஆனால், ராகுலை தலைவராக்கும் முயற்சியில் அசோக் கெலாட்டும் தீவிரம் காட்டி வந்தார். கடைசி முயற்சியாக ராகுலை நேரில் சந்தித்து, அவரை சமரசம் செய்ய அசோக் கெலாட் முடிவு செய்தார்.

இதற்காக கேரளா புறப்பட்டு வந்த அவர், கொச்சியில் நடைபயணத்தில் உள்ள ராகுலை நேற்று சந்தித்து பேசினார்.

**சமரச முயற்சி தோல்வி**

ஆனால், கெலாட்டின் கோரிக்கையை ராகுல் நிராகரித்தார். இதையடுத்து, ராகுலை தலைவராக்கும் கடைசி கட்ட சமரச முயற்சி தோல்வியில் முடிந்தது.

இதை தொடர்ந்து, செய்தியாளர்களை சந்தித்த அசோக் கெலாட் கூறியதாவது:அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவிக்கான தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளேன். ராஜஸ்தான் சென்றதும், வேட்பு மனு தாக்கலுக்கான நாள் குறித்து முடிவு செய்வேன். மற்ற காங்கிரஸ் நண்பர்களும் என்னை எதிர்த்து போட்டி யிடுவர். இறுதி முடிவு எதுவாக இருந்தாலும், கட்சியை அனைத்து மட்டத்திலும் வலுப்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். நாம் வலுவான எதிர்க்கட்சியாக உருவெடுக்க வேண்டும். கட்சித் தலைவர் தேர்தலில் நான் வெற்றி பெற்றால், ராஜஸ்தான் முதல்வராக பொறுப்பேற்கப் போவது யார் என்பதை காங்கிரஸ் இடைக்கால தலைவர் சோனியாவும் ராஜஸ்தான் காங்கிரஸ் பொறுப்பாளர் அஜய் மாக்கனும் முடிவு செய்வர். இவ்வாறு அவர் கூறினார்.

## மலேசியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 10 தொன் போதைப்பொருள் மூடைகள் தூத்துக்குடி துறைமுகத்தில் பறிமுதல்!



தூத்துக்குடி,செப்.24

மலேசியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட ரூ.1.70 கோடி (இந்தி யப் பணத்தில்) மதிப்பிலான 10 தொன் போதைப்பொருள் தூத்துக்குடி துறைமுகத்தில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மலேசியாவில் இருந்து கப்பல் ஒன்றின் மூலம் தூத்துக்குடி துறைமுகத்திற்கு 'வைட் சிமெண்ட்' எனப்படும் மூலப்பொருள் கொண்டு வரப்பட்டது. இதனுடன் சேர்த்து சட்ட விரோதமாக தடை செய்யப்பட்ட பாப்பி சீட் எனப்படும் போதைப்பொருள் கடத்திக் கொண்டு வரப்படுகிறது என்று மத்திய புலனாய்வு அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து கப்பல் கரைக்கு வந்ததும் அதிகாரிகள் உடனடியாக கப்பலில் சோதனை செய்தனர். அப்போது கப்பலில் வைட் சிமெண்ட் கொண்டு வரப்பட்ட கெண்டெய்னர் பெட்டியில் சுமார் 100 க்கும் மேற்பட்ட மூடைகளில் 10 தொன் எடை கொண்ட பாப்பி சீட் எனப்படும் போதைப்பொருள் இருந்தது. துருக்கி, கிர்கிஸ்தான் உள்ளிட்ட 4 நாடுகளில் மட்டுமே இந்த பாப்பி சீட் போதைப்பொருளை பயன்படுத்த அனுமதி உள்ளது. இதையடுத்து சட்டவிரோதமாக தூத்துக்குடி துறைமுகத் திற்கு கொண்டு வரப்பட்ட போதைப்பொருளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

தொடர்ந்து வைட் சிமெண்ட் கொண்டு வரப்பட்ட கண்டெய்னர் பெட்டி எந்த முகவரியில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளது என்று மத்திய புலனாய்வு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஒரே குடும்பத்தினர் நால்வருக்கு இரட்டைக் கொலைக்குத் தூக்கு

உத்தர பிரதேசத்தில், இரட்டைக் கொலை வழக்கில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேருக்கு தூக்குத் தண்டனை விதித்து, மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. இங்கு, படாவுன் மாவட்டத்தில் உள்ள உரைனா கிராமத்தைச் சேர்ந்தவர்கள் கின்பால், இவரது மனைவி ஜல்தாரா மற்றும் மகன்கள் விஜய்பால், ராம்வீர். இதே கிராமத்தைச் சேர்ந்த பப்பு சிங்கின் மகன் கோவிந்தும் (வயது 25), கின்பால் மகள் ஆவும் (வயது 22) காதலித் தனர். இதை, கின்பால் குடும்பத்தினர் கடுமையாக எதிர்த்தனர். இதனால், காதல் ஜோடி இரகசிய திருமணம் செய்து புதுடில்லி சென்றுவிட்டது.

இதையடுத்து, கின்பால் தன் மகள் ஆவிடம், இரு வீட்டார் சம்மதத்து டன் மீண்டும் திருமணம் செய்து வைப்பதாகக் கூறி, இளம் தம்பதியை கிராமத்துக்கு வரவழைத்துள்ளார். ஊர் திரும்பிய கோவிந்தை, கின்பால் கோடாரியால் தாக்கிக் கொன்றார். கோவிந்தைக் காப்பாற்றச் சென்ற ஆவை, கின்பால் குடும்பத்தினர் தாக்கிக் கொன்றனர்.கடந்த, 2017 இல் நடந்த இச்சம்பவம் குறித்து பப்பு சிங் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார். கின்பால் குடும்பத்தினர் கொன்றவர்களின் உடல்களை அப்புறப்படுத்தும் போது, அக்கம் பக்கத்தினர் பார்த்து, அவர்களும் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.இதன் அடிப்படையில், கின்பாலும், அவரது குடும்பத்தினரும் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டது. மாவட்ட நீதிமன்றத்தில் நடை பெற்ற இந்த வழக்கில், கின்பால், அவரது மனைவி மற்றும் இரு மகன்களுக்கு தூக்கு தண்டனை விதித்து நீதிபதி பங்கஜ் அகர்வால் நேற்று உத்தரவிட்டார்.

## கான்பூரில் கொரோனாவால் உயிரிழந்தவரின் சடலத்துடன் 18 மாதங்கள் வாழ்ந்த குடும்பம்!



லக்னோ,செப்.24

பதினெட்டு மாதங் களுக்கு முன் கொரோ னாவால் உயிரிழந்தவர் மீண்டு வருவார் என்ற நம்பிக்கையில் அவரது உடலுடன் வாழ்ந்த குடும்பத்தினர் பற்றிய அதிசய செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

உத்தரபிரதேச மாநி லம் கான்பூர் மாவட்டம் ராவத்பூர் பகுதியை சேர்ந்தவர் விம்லேஷ் குமார் டிடெக்ஸ். வருமா னவரித்துறை ஊழிய ரான இவருக்கு கடந்த ஆண்டு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனால், அவரை குடும்பத்தினர் தனியார் மருத்துவம னையில் சேர்ந்தனர். ஆனால், மருத்துவம னையில் அனுமதிக்கப்பட்ட விம்லேஷ் குமார் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனை தொடர்ந்து இறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டு விம்லேஷ் குமாரின் உடல் அவரது மனைவி மற்றும் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால், தனது கணவர் விம்லேஷ் குமார் உயிரிழக்கவில்லை என்றும் அவர் கோமாவில் இருப்பதாக அவரது மனைவியும், குடும்பத்தி னரும் கருதியுள்ளனர்.

இதனால், மருத்துவமனையில் இருந்து உடலை பெற்றுக்கொண்ட குடும்பத்தினர் விம்லேஷின் உடலை அடக்கம் செய்யமால் ராவத்பூரில் உள்ள வீட்டிலேயே வைத்துள்ளனர். வீட்டில் விம்லேஷின் அறையில் அவரது உடலை வைத்த அவரது மனைவி, குடும்பத்தி னர் அந்த உடலுடன் கடந்த 18 மாதங்களாக வாழ்ந்து வந்துள்ளனர்.

தினமும் காலை கங்கை ஆற்றின் நீரை உடல் முழுவதும் தெளித்துள்ளனர். இதன் மூலம் அவர் மீண்டும் உயிருடன் வருவார் என நம்பியுள்ளனர்.

விமல்குமார் உயிரிழந்த நிலையில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டதா என்பது குறித்து அக்கம்பக்கத்தினர் கேட்டபோது தனது கணவர் கோமாவில் உள்ளார் எனவும் அவர் விரைவில் மீண்டு வருவார் எனவும் அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

அவ்வப்போது, ஆக்சிஜன் சிலிண்டரையும் குடும்பத்தினர் வீட்டிற்குள் கொண்டு சென் றுள்ளனர்.

இந்நிலையில், விம்லேஷ் குமார் உயிரிழந்த போதும் அவரது குடும்ப ஓய்வூதியம் தொடர்பான ஆவணங்கள் எந்த வித முன்னேற்றமும் இன்றி அலுவலகத்திலேயே தேங்கி கிடப்பதாகவும், இதில் சந்தேகம் உள்ளதாகவும் இது குறித்து விசாரிக்கும்படி கான்பூர் வருமானவரித்துறை அலுவலகத்தில் இருந்து தலைமை மருத்துவ அதிகாரிக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நேற்றுப் பொலிஸார், மருத்துவக்குழுவினர் உள்பட அதிகாரிகள் அடங்கிய குழு ராவத்பூரில் உள்ள விம்லேஷ் குமாரின் வீட்டிற்கு நேரில் சென்று ஆய்வு செய்துள்ளனர். அப்போதும், விம்லேஷ் உயி ருடன் உள்ளார் எனவும், அவர் கோமாவில் இருக்கிறார் எனவும் குடும்பத்தினர் அதி காரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த அதிகாரிகள் வீட்டிற்கு சென்று பார்த்துள்ளனர்.

அப்போது, வீட்டில் உள்ள ஓர் அறையில் கிட்டத்தட்ட அழுகிய நிலையில் விம்லேஷின் உடல் படுக்கையில் வைக்கப்பட்டிருந்ததை கண்டு அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர். பின்னர்,

அந்த உடலை மீட்ட அதிகாரிகள் மருத்துவ னைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விம்லேஷ் குமாரின் மனைவியிடம் விசாரணை நடத்தினர்.

அவர் மனநலம் தொடர்பான பிரச்சினையில் இருப்பதை கண்டறிந்த மருத்துவத்துறையினர் அவரை சிகிச்சைக்காக அருகில் உள்ள மனநல மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், விம்லேஷ் குமாரின் குடும்பத்தினருக்கும் மன நலம் சார்ந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 18 மாதங்களுக்கு முன் உயிரிழந்த நபர் உயிருடன் மீண்டு வருவார் என அவரது உடலுடன் வந்த மனைவி மற்றும் குடும்பத்தி னர் வாழ்ந்து வந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் குறித்து குச்சவெளி பிரதேசத்தில் கலந்துரையாடல்





(பைசல் இஸ்மாயில்)

சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார், பாடசாலை மாணவர்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களை உள்ளடக்கிய போசணைக் கொள்கைத் திட்டத்தை எமது பிரதேசத்தில் அமுல்படுத்துகின்ற அதேவேளை அரிசி ஆலைகளையும் எமது பிரதேசத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் எம்.முபாறக் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 'கிராமப்புற பொருளாதார மறுமலர்ச்சி மூலம் வறுமையை ஒழித்தல்' எனும் தொனிப்பொருளின் கீழ் தேசிய உணவு பாதுகாப்புத்திட்ட பிரதேச மட்ட கலந்துரையாடல் நேற்று முந்தினம் குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் எம்.முபாறக் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஜனாதிபதியின் இத்திட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களின் பொருளாதார மறுமலர்ச்சியை உருவாக்கு–வதுடன் அவர்களின் வறுமையையும் ஒழிக்க முடியும். அத்துடன் சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார், பாடசாலை மாணவர்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களுக்கு சத்துணவு வழங்குவதன் மூலம் அவர்களின் ஊட்டச்சத்து குறைபாட்டிலிருந்து விடுவித்து, உணவுப் பாதுகாப்பையும், வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்த முடியும்.

இதன் மூலம் பாதுகாப்பான, ஆரோக்கிய கிராமத்தை உருவாக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

குச்சவெளி பிரதேசத்தில் கால்நடைகளின் தொல்லை வெகுவாக அதிகரித்துக் காணப்படுகின்றது இதனால் விபத்துச் சம்பவங்களும் அதிகரித்து வருன்றன. கால்நடைகளை ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவராவிட்டால் இன்னும் பல ஆபத்துக்களை நாம் எதிர்கொள்ள வேண்டிவரும்.

எமதுமக்களையும், அவர்களின்சொத்துக்களையும் உயிர்களையும் பாதுகாக்க அதுதொடர்பான அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் அவர்களுக்கான சகல ஒத்துழைப்புக்களை குச்சவெளி பிரதேச சபையும், சபை உறுப்பினர்களும் வழங்க என்றும் தயாராக இருக்கின்றோம். – என்றும் குறிப்பிட்டார். இந்நிகழ்வில், குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம சேவகர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கிழக்கு மாகாண விளையாட்டு விழா கந்தளாயில் வியாழனன்று ஆரம்பம்







47 ஆவது கிழக்கு மாகாண விளையாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று முன்தினம் கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமானது. கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக் களத்தின் பணிப்பாளர் என்.எம்.நௌபீசின் அழைப்பில் கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டு அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யு.ஜி.திசாநாயக்கவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்து கொண்டார்.

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட வீர வீராங்கனைகள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் நடுவர் குழாமின் விசேட அணிவகுப்பு மரியாதையும் இதன்போது இடம்பெற்றன.

முந்நூறுக்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் இதில் கலந்து கொள்கின்றனர். விளையாட்டு வீரர்கள் விளையாட்டு தொடர்பான சத்தியப்பிரமாணம்தை இதன்போது செய்துகொண்டார்கள்.

விளையாட்டு விழா ஆரம்பிப்பதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வாசகம் கிழக்கு மாகாண ஆளுநரினால் வாசிக்கப்பட்டதும் போட்டிகள் ஆரம்பமான.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம, கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் கலாமதி பத்மராஜா, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண வீதியபிவிருத்தி அமைச்சின் செயலாளர் , திணைக்கள தலைவர்கள், அதிகாரிகள் உட்பட விளையாட்டு வீரர்களும் கலந்து கொண்டனர்.




# திருகோணமலையில் நாளை 9 நூல்களின் அறிமுக நிகழ்வு

(பைல் இஸ்மாயில்)

மூதூர் - சேனையூர் அனாமிகா பண்பாட்டு மைய தின் ஏற்பாட்டில் பேராசிரியர் பாலசுகுமாரின் ஒன்பது நூல்களின் அறிமுக விழா நாளை 25 ஆம் திகதி ஞாயிற்று கிழமை திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள தின் மாகாண பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நூல் அறிமுக விழாவுக்கு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணை குழுவின் செயலாளர் மூ.கோபாலரத்தினம் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சேனையூர் கலம்பகம், கரைகள் கடந்து, Eezha Natiyam, Inniyam & Music & Dance of Eazham Tamilians, கறுட்பி, கொடி எழு அன்னப்புரவி, தமிழ் ம பில் சிவாஜி கணேசனின் நடிப்பு ஈழ நாட்டியம், தோழனே நந்தினி, நஞ்சுமிழும் காளான்கள் என்ற இந் 9 நூல்களின் அறிமுகமும் இதன்போது இடம் பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# கார்ட்டூனிஸ்ட் அஸ்வின் நினைவேந்தலும் புலமைப்பரிசில் வழங்கல் நிகழ்வும் இன்று!

மறைந்த ஊடகவியலாளரும் கேலிச்சித்திர கலைஞருமான அஸ்வின் சுதர்சனின் 6 ஆண்டுகள் நினைவேந்தல் நிகழ்வும், அவர் ஞாபகார்த்த ஊடக கற்கை மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் நாளை (ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஊடக அரங்கில் கருத்தாளமிக்க மற்றும் தீர்க்கதரிசனம் கூறும் கார்ட்டூன்களால் அனைவரையும் கவர்ந்திழுத்து தனக்கென வொரு முத்திரையைப் பதித்த முன்னணி கேலிச்சித்திரக்கலைஞர் அஸ்வின் சுதர்சன் மறைந்து ஆறு ஆண்டுகளான நிலையில், அவரை நினைவுகூரும் முகமாக யாழ். ஊடக அமையத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) பி.ப. 3 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் அஸ்வின் தொடர்பான ஞாபகார்த்த உரைகள் இடம்பெறவுள்ளதுடன் சிறப்பாக அஸ்வினின் குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டுவரும், ஊடக கற்கைநெறியை தொடரும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட தேவையுடைய மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் நமது ஈழநாடு அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவரும் அஸ்வின் ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டத்தில் இம்முறை யாழ்.பல்கலைக்கழகத்தால் தெரிவு செய்யப்பட்ட ஊடக கற்கையில் சிறப்பு கலைமாணியாக இரண்டாம் ஆண்டில் கல்வியைத்தொடரும் மாணவி ஸ்ரீபன் நத்தாசாவுக்கு கற்றல் ஊக்குவிப்புக்கான பணத்தொகையாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

யாழ்.ஊடக அமையத்தால் முன்னெடுக்கப்படும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அஸ்வினின் நினைவுகளைப் பகிர அனைவருக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு பத்திரிகையில் தனது ஊடகப் பயணத்தை ஆரம்பித்த அஸ்வின், வலம்புரி, சுடரொளி, வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் தனக்கான முத்திரிகைகளைப் பதித்துள்ளார். அதேவேளை வீரகேசரியின் யாழ். ஓசை பதிப்பின் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

இதில் இவர் எழுதிய 'கேட்டியளே சங்கதி' என்ற பத்தி எழுத்து பல இடங்களிலும் எதிரொலித்தது. அந்த எழுத்துகள் ஓர் மௌனப் புரட்சியையும் செய்தது. இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் சிறந்த ஊடகவியலாளர் விருதை 'கேட்டியளோ சங்கதி' பத்திக்காக வழங்கிக் கௌரவித்தது. இறுதியாக தினக்குரல் பத்திரிகையில் இவர் வரைந்த கருத்தாழமிக்க கார்ட்டூன்கள் வாசகர்களை மட்டுமின்றி அரசியல் தலைவர் களையும் பேசவைத்தது. அவரது காட்டூன்கள் பல இன்றைய காலத்துக்கும் பொருத்தமான தீர்க்கதரிசன ஓவியங்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடற்கரையைத் தூய்மைப்படுத்தல் ஊடாக பொதுமக்கள் மத்தியில் பாரிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் கடல் வளத்தைப் பேணும் வகையிலான கருத்துருவாக்கத்தை மேற்கொள்ளும் வகையிலும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. விவசாயிகளின் பிரச்சினை; நாடாளுமன்றில் கலந்துரையாடல்





மட்டக்களப்பு மாவட்ட விவசாய சங்கங்களின் தலைவர்கள் மற்றும் அவற்றின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் மற்றும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஆகியோரை நாடாளுமன்றத்தில் சந்தித்துப் பேசினர். விவசாய நடவடிக்கைகளில் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை எடுத்து விளக்கிய விவசாயிகள், இவற்றை நிவர்த்திக்க அவசர முயற்சிகளை செய்யுமாறு அமைச்சர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் நஸீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஆகியோர் மேற்கொண்டனர்.

இச்சந்திப்பில் அமைச்சர் நசீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், அமைச்சின் செயலாளர் புஷ்பகுமார ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விவசாயிகளின் பிரச்சினைகளை செவிமடுத்த அமைச்சர் மஹிந்த அமரவீர, மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நாலாயிரம் தொன் பசளையை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்தார். எதிர்வரும் ஒக்டோபரில் செய்கை பண்ணப்படவுள்ள பெரும்போகச் செய்கைகளுக்கு இந்தப்பசளைகள் பயன்படுத்தப்படவுள்ளன.

மேலும், உரிய வேளைக்கான நீர்ப்பாசனம், கால்நடையாளர்களால் உரிமை கோரப்படும் மேய்ச்சல்தரை போன்ற விடயங்களுக்கு இருதரப்பினருடனும் கலந்துரையாடி முடிவெடுப்பதென இங்கு தீர்மானிக்கப்பட்டது.

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த மாநாட்டில் மேலும் உதவி கோரத் தயாராகின்றார் ஜனாதிபதி!

*68 உறுப்பு நாடுகளைக் கொண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் 57 ஆவது மாநாட்டில் கடன் மறுசீரமைப்பிற்கு ஆதரவை கோர, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்துள்ளார்.*

*பிலிப்பைன்ஸின் மணிலா நகரில் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை இந்த மாநாடு இலங்கையின் தலைமைத்துவத்தின் கீழ் நடைபெறவுள்ளது.*

*இந்த ஆண்டு இலங்கையில் நடைபெறவிருந்த இந்த மாநாடு, நாட்டின் பொருளாதார மற்றும் நெருக்கடியான சூழ்நிலை காரணமாக பிலிப்பைன்ஸில் நடைபெறவுள்ளது.*

*2016 ஆம் ஆண்டு அப்போதைய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க விடுத்த கோரிக்கைக்கு அமைய நிதியமைச்சர் பதவி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.*



*அதன்படி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படவுள்ளார்.*

# கிராம மற்றும் மாதர் சங்கங்களுடன் தம்பலகாமத்தில் கலந்துரையாடல்






தம்பலகாமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருடனான நேரடி கலந்துரையாடல் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் நடந்த இந்தக் கூட்டத்துக்கு பிரதேச செயலாளர் திருமதி.ஜெ.ஸ்ரீபதி தலைமை தாங்கினார். கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் திரு. நா.தனஞ்ஜெயன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். தம்பலகாமம் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.எஸ்.பத்மராஜா, திட்டமிடல் கிளையின் சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர் திரு. ஜெ.நிகஷாத் ஆகியோரும் பங்குபற்றினர்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதேச செயலாளர், தற்போதைய பொருளாதார நெருக்கடியான சூழலில் இருந்து கிராமங்களை மீட்டெடுப்பதில் சங்கங்களுக்கு பாரிய பொறுப்பு காணப்படுகின்றது, மேலும் சங்கங்கள் தமது செயற்பாடுகளை கிராம மட்டத்தில் விரிவுபடுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்

தொடர்ந்து கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் சங்கங்களின் செயற்பாடுகள் மற்றும் உணவுப் பாதுகாப்பைக் கிராம மட்டத்தில் உறுதிப்படுத்த சங்கங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என ஆலோசனைகளை வழங்கி அது தொடர்பாக சங்க அங்கத்தவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.09.2022இல் வெளியிடப்பெற்றது.